மாநில வரைபடம்

# தமிழ் நாடு
# तमिलनाडु
# TAMIL N>DU

அளவுகோல் 1:1,000,000

இந்திய நிலஅளவைத்துறை SURVEY OF INDIA

முதல்பதிப்பு 2026.

அளவு கோல் 1:1,000,000

1 சென்டி மீட்டர் 10 கிலோமீட்டர்

கிலோமீட்டர் 10 0 10 20 30 40 50 கிலோமீட்டர்

உயரம் மற்றும் ஆழம் மீட்டரில் உள்ளன.

இந்தியாவின் பிராந்திய நீர்ப்பரப்பு, தோராய அடிப்படைக்கோட்டிலிருந்து அளவிடப்படும் பன்னிரண்டு கடல் மைல் தொலைவு வரை கடலுக்குள் நீண்டுள்ளது.

மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களின் தலைநகரங்கள், வரைபடத்தில் செவ்வக கட்டத்தில் குறிக்கப்பட்டுள்ளன.

துணை மாவட்டம் (வட்டம்) மற்றும் அதன் தலைநகரம் பெயர் வெவ்வேறாக இருந்தால், துணை மாவட்டத்தின் (வட்டம்) பெயர் அடைப்புக்குறிக்குள் எழுதப்பட்டுள்ளன, உதாரணம் : திருவத்திபுரம் (செய்யாறு).

## தமிழ் நாடு

இந்தியாவின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு, அதன் புவியியல் அமைப்பால் தனித்தன்மை வாய்ந்தது. கிழக்கிலும் தெற்கிலும் விரிந்துள்ள பெருங்கடல் (வங்காள விரிகுடா மற்றும் இந்தியப் பெருங்கடல்), மேற்கில் அற்புதமான மேற்குத் தொடர்ச்சி மலைகள், வடக்கில் ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களால் இது சூழப்பட்டுள்ளது. தமிழ்நாடு, அதன் தனிச்சிறப்பான தட்பவெப்பநிலை, மக்களின் அரவணைப்பு, பாரம்பரியம், இசைப் பாரம்பரியம், கோயில்கள் மற்றும் அந்தக் கோயில்களை அலங்கரிக்கும் வானளாவிய கோபுரங்கள் போன்ற அம்சங்களால் "ஆன்மிக பூமி" என அழைக்கப்படுகிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய காலத்தில் இது "மெட்ராஸ்மாகாணம்" என்று அழைக்கப்பட்டு வந்தது. பின்னர், 1968 ஆம் ஆண்டில், இந்த மாநிலம் அதன் மொழி அடையாளத்தைக் கொண்ட "தமிழ்நாடு" என அதிகாரப்பூர்வமாகப் பெயரிடப்பட்டது. 'தமிழ்நாடு' என்பது, 'தமிழ் பேசும் மக்களின் நாடு' என்பதைக் குறிக்கும் பெயராகும். இந்நிலத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாராய்ச்சிகள், தமிழ்நாட்டில் திராவிடர்கள் வாழ்ந்து வந்ததற்கான சான்றாகத் திகழ்கிறது.

1,30,060 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் 38 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள இம்மாநிலத்தின் மக்கள் தொகை, 2011ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 72,147,030 ஆகும். காவேரி, பெண்ணையாறு, பாலாறு, வைகை, தாமிரபரணி போன்ற முக்கிய ஆறுகள் கிழக்கு நோக்கி பாய்கின்றன.

தலைநகரமாக விளங்கும் சென்னை, ஒருகாலத்தில் ஒரு சிறிய மீன்பிடி கிராமம் தான். 1639ஆம் ஆண்டு, இங்கு கட்டப்பட்ட செயிண்ட் ஜார்ஜ் கோட்டை இன்று வரை அதன் வரலாற்றுப் பாகங்களைச் சுமந்துள்ளது. இதுவே பின்னாளில் ஜார்ஜ் டவுன் என உருவெடுத்து, இந்தியாவின் மிகப் பழமையான மாநகராட்சிகளில் ஒன்றான மெட்ராஸ் நகரமாக வளர்ந்தது. இன்று நாம் அறியும் சென்னை அதனுடைய கலாச்சாரம், கலை, வர்த்தகம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் நெடுங்கதையுடன் நிறைந்துள்ளது. சென்னை, இந்திய திரை உலகில் ஒரு முக்கிய கலைநகரமாக திகழ்கிறது. திரைப்பட ஸ்டுடியோக்கள், நடனம் மற்றும் இசை விழாக்கள் இதனை ஒரு கலைநகரமாக மாற்றியுள்ளது. உலகின் மிகப் பழமையான கலை அரங்குகளில் ஒன்றான சென்னை மியூசிக் அகாடமி, இங்கு நடக்கும் மார்கழி இசை விழா போன்றவை இசையையும் நடனத்தையும் வளர்த்தெடுத்துள்ளன. பழமைமிக்க கபாலீஸ்வரர் கோயில், அதன் திராவிடக் கோபுரங்கள், மயிலாப்பூரில் உள்ள சாந்தோம் பேராலயம், ஆன்மீகச் சிறப்புகளை கொண்டவை. திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரின் நினைவாக கட்டப்பட்டுள்ள வள்ளுவர் கோட்டம், தமிழரின் அறிவியல் மரபையும் உணர்த்துகிறது. பசுமையையும் பொழுதுபோக்கையும் தரும் மெரினா கடற்கரை, உலகின் இரண்டாவது பெரிய கடற்கரை எனும் பெருமையைப் பெறுகிறது. இவை தவிர, அருங்காட்சியகம், மான் பூங்கா, பாம்பு பூங்கா, மீன் காட்சியகம் ஆகியவை முக்கிய சுற்றுலாத் தலங்களாக விளங்குகின்றன.

108 கோயில்கள் கொண்ட காஞ்சிபுரம், இந்தியாவின் ஏழு புனித நகரங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. பல்லவக் கலையின் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் இந்நகரம், ஆன்மிகமும் கட்டடக் கலையும் இணையும் ஒரு புகழ்பெற்ற தலம். தஞ்சாவூர், "தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம்" என்று அழைக்கப்படுகிறது. இங்கு உள்ள பிரகதீஸ்வரர் கோயில், சோழர் கட்டடக்கலையின் மாபெரும் அற்புதமாக விளங்குகிறது மதுரை மீனாட்சியம்மன் கோயில், அதன் வண்ணமயமான கோபுரங்களால்உலகளாவிய அற்புதமாகக் கருதப்படுகிறது. கன்னியாகுமரி, புனித யாத்திரை மற்றும் இயற்கை அழகுக்கான சிறந்த இடம். விவேகானந்தர் பாறையின் நினைவுச் சின்னம், சூரிய உதயம் மற்றும் மறையும் காட்சிகளைக் காண சிறந்த இடமாக விளங்குகிறது.

மலைவாசஸ்தலங்களின் ராணியாகக் கருதப்படும் "உதகமண்டலம்" (ஊட்டி), தமிழ்நாட்டின் மிக உயரமான மலைச்சிகரமான தொட்டபெட்டா (2,240 மீ) என்னும் நீலகிரி மலைத்தொடரில் அமைந்துள்ளது. இந்த பகுதியில் யூகலிப்டஸ் மரங்கள், தேயிலை மற்றும் காப்பித் தோட்டங்கள் பெருமளவில் காணப்படுகின்றன. நீலகிரி மலைகள் இந்தியாவின் மிக பழமையான பழங்குடியினரான தோடர் மக்களின் வாழ்விடமாகவும் விளங்குகின்றன. உதகமண்டலத்திற்கு அருகே உள்ள முதுமலை வனவிலங்கு சரணாலயம், அரிய வகை விலங்குகள், ஊர்வனங்கள் மற்றும் பறவைகளுக்காக பெயர்பெற்றது. கூடலூர், கோத்தகிரி, குன்னூர் போன்ற ஊர்கள், நீலகிரியின் அழகை மேலும் உயர்த்துகின்றன. அதேபோல், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஆகியவையும் தமிழ்நாட்டின் புகழ்பெற்ற மலைவாசஸ்தலங்களாகும். ஒகேனக்கல் மற்றும் குற்றாலம் போன்ற இடங்களில் அமைந்துள்ள நீர்வீழ்ச்சிகள், இயற்கையான சுகாதார ஓய்விடங்களாக விளங்குகின்றன. இவை வெவ்வேறு நோய்களுக்கு நிவாரணம் தரும் குணமுடைய நீருடன், மனதையும் உடலையும் புதுப்பிக்கும் இடங்களாக இருக்கின்றன. வேடந்தாங்கல் என்பது இந்தியாவின் மிக முக்கியமான நீர்ப்பறவைகள் சரணாலயமாகத் திகழ்கிறது. பருவக்காலங்களில் இது ஆயிரக்கணக்கான பறவைகளை ஈர்க்கும் முக்கியமான பறவை கூடாரமாகும். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பூம்புகார், அதன் கலை மற்றும் இலக்கிய வரலாற்றுக்காகப் புகழ் பெற்றது. மேலும், கோயம்புத்தூர் நகரம் "தென்னிந்தியாவின் மான்செஸ்டர்" என்று அழைக்கப்படுகிறது, ஏனெனில் இது தரத்துணி மற்றும் தொழில்துறை வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றுகிறது.

தமிழ்நாடு பெரிய கலாச்சாரத்தின் நிலம் மற்றும் தத்துவவியல் பெருமையுடன் விளங்கும் மாநிலம். திருவள்ளுவர் என்ற மாபெரும் அறிஞர் திருக்குறளை எழுதியவர், புனித திருநாவுக்கரசு சுவாமிகள், தேசிய கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் மற்றும் சமூக சீர்திருத்தவாதி பெரியார் போன்றோர் தமிழகத்தின் பெருமையை உயர்த்தியவர்கள். இந்த மாநிலம் இந்தியாவின் மிகவும் நகரமயமாக்கப்பட்ட மற்றும் தனிப்படுத்தப்பட்ட மாநிலங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இருப்பினும், தமிழ்நாடு பெரும்பாலும் கிராமப்புறத் தோற்றம் கொண்டது. அதனால் விவசாயமே இங்கு மக்களின் பிரதான வாழ்க்கை வழிமுறையாக உள்ளது. தமிழ்நாட்டில் சாலைகள், ரயில்கள் மற்றும் விமானப் போக்குவரத்து ஆகியவை நன்கு மேம்பட்டவை. மேலும், கடல் போக்குவரத்தும் முக்கியப் பங்கு வகிக்கிறது; இதில் சென்னை மற்றும் தூத்துக்குடியில் உள்ள செயற்கைத் துறைமுகங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. பொங்கல், அறுவடைத் திருநாளாகும் இது, தை மாதத்தில் மகிழ்வுடன் அனைத்து மக்களாலும் கொண்டாடப்படுகிறது. இது விவசாயம் மற்றும் கதிரவனுக்கு நன்றி செலுத்தும் பண்டிகையாகும்.

## குறிப்புகள்

தலைநகரத்தின் பெயர்: மாநிலம் / யூனியன் பிரதேசம்.................. சென்னை

தலைநகரத்தின் பெயர்: மாவட்டம், துணை மாவட்டம்.................. ஈரோடு பழனி

இதர நகரங்களின் பெயர் .................. நல்லூர்

மாவட்டத்தின் பெயர் .................. க ரூ ர்

மண்டலம், வட்டாரம்.................. ம ல பா ர் க ட ற் க ரை

குன்றின் பெயர், சிகரத்தின் பெயர்.................. ப ழ னி ம லை க ள் தொட்டபெட்டா

மலை, மலைத்தொடர்.................. கி ழ க் கு தொ ட ர் ச் சி ம லை க ள்

தலைமையிடம்: மாநிலம் யூனியன் பிரதேசம், மாவட்டம்..................

.......,,......... துணை மாவட்டம், இதர நகரங்கள்..................

சாலை: தேசிய விரைவுச்சாலை, தங்க நாற்கரச் சாலை.................. NE 7 16

.....,,.....வடக்கு-தெற்கு வழித்தடம், தேசிய நெடுஞ்சாலை.................. 44 36

....,, ...மாநில நெடுஞ்சாலை, பிற சாலைகள்..................

அகலப்பாதை ரயில்வே:ரயில் நிலையத்துடன் இரட்டைப்பாதை ஒற்றைப்பாதை.................. மைலம்

.....,,.....ரயில்வே பிறவழித்தடங்கள், நீர் வழிப்போக்குவரத்து..................

நீரோடை: வற்றாதது, நீர்த்தேக்கம்..................

ஏரி, சதுப்பு நிலம், கால்வாய்..................

ஆழச் சமக்கோடு, ஆழம்.................. 9 46

எல்லை: மாநிலம், மாவட்டம், துணை மாவட்டம்..................

கோவில், தேவாலயம்..................

கலங்கரை விளக்கம், கோட்டை..................

உயரம்: முக்கோணவியல் நிலையம், புள்ளி, சி ஓ ஆர் எஸ்.................. △422 •892

விமான நிலையம்: சர்வதேச, பிற..................

இவ்வரைபடத்தைப் பற்றிய கூடுதல் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்

இயக்குநர்
தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகள் புவி-சார் இயக்குநரகம்
3வது மற்றும் 4வது தளங்கள், புதிய கூடுதல் அலுவலகக் கட்டடம்
சாஸ்திரி பவன், 26 ஹாடோஸ் சாலை
நுங்கம்பாக்கம், சென்னை-600006.

WEBSITE - www.surveyofindia.gov.in

தேசிய வரைபட நிறுவனமான இந்திய நில அளவைத் துறையின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ எந்த வகையிலும் மறு உருவாக்கம் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.




## சிறப்பு குறிப்புகள்

| வ.எண். | வட்ட பெயர் | ச. எண் |
|---|---|---|
| 1 | மாதவரம் | ஊ/2 |
| 2 | அம்பத்தூர் | ஊ/2 |
| 3 | அயனாவரம் | ஊ/2 |
| 4 | பெரம்பூர் | ஊ/2 |
| 5 | தண்டையார்பேட்டை | ஊ/2 |
| 6 | புரசைவாக்கம் | ஊ/2 |
| 7 | அமைந்தகரை | ஊ/2 |
| 8 | மாம்பலம் | ஊ/2 |
| 9 | வேளச்சேரி | ஊ/3 |
| 10 | ஆலந்தூர் | ஊ/3 |
| 11 | மயிலாப்பூர் | ஊ/2 |
| 12 | மதுரவாயல் | ஊ/2 |
| 13 | எழும்பூர் | ஊ/2 |
| 14 | கொளத்தூர் | ஊ/2 |
| வ.எண். | பெயர் | ச. எண் |
| 15 | மண்டியா | ஆ/3 |
| 16 | தும்கூரு | இ/3 |
| 17 | புதுக்கோட்டை | ஈ/5 |
| 18 | ஸ்ரீ சத்ய சாய் | இ/2 |
| 19 | அன்னமையா | ஈ/2 |

பதிவு எண். 362 இநிஅது அஅஇ '26 (தநாபு&அநிதீபுஇ - 1:1,000,000) -12.
முதல் பதிப்பு 2026.
முந்தைய பதிப்பு: முதல் 1963, இரண்டாவது 1980 (கேரளம், புதுச்சேரி, தமிழ்நாடு & லட்சத்தீவு).
முதல் பதிப்பு 2003, இரண்டாவது பதிப்பு 2022, மூன்றாவது பதிப்பு 2025 (தமிழ் நாடு & புதுச்சேரி)

இந்திய சர்வேயர் ஜெனரல், ஹிதேஷ் குமார் எஸ். மக்வானா, இ.ஆ.ப., உத்தரவின் படி வெளியிடப்பட்டது,
இந்திய நில அளவைத் துறை, ஹாதிபர்கலா எஸ்டேட், அஞ்சல் பெட்டி எண் 37, டேராடூன் - 248001 (உத்தரகாண்ட்)
அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, இந்திய அரசு.
2026.

வீச்சு / எறிவு : லேம்பர்ட் கன்பார்மல் கோனிக்     தரவு : உலக புவிசார் அமைப்பு 84

இந்திய நில அளவைத் துறையின் அச்சக அலுவலகத்தில் அச்சிடப்பட்டது.

© இந்திய அரசின் பதிப்புரிமை, 2026.